Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Case Number | **STC.No.213/2022** |
| Deposition of | PW- 1 |
| Name | : முரளி |
| Father's Name/Husband Name | : கணபதி |
| Village | : ஜம்மனஅள்ளி |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10.08.2026**

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். ஆனால் அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

எதிரி பிரியங்கா கிரைனெட் தொழில்சாலை நடத்திவருவதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை.

நான் என்நேரமும் லட்சகணக்கில் பணம் கையிருப்பு வைத்திருப்பேன் என்றால் இல்லை.

10.07.2021 ம் தேதி வழக்கு காசோலை பணம் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் எனது பாக்கு தோட்டத்தில் பாக்கு விற்றதன் மூலம் கிடைத்தது.

பாக்கு தோப்பை வருடாந்திர குத்தகைக்கு விடுவது வழக்கம் என்றால் சரிதான்.

நான் பாக்கு தோப்பை குத்தகைக்கு விட்டதற்கான ஒப்பந்தப்பத்திரம் உள்ளதா என்றால் இல்லை.

எனக்கு எதிரியை எவ்வளவு நாட்களா தெரியும் என்றால் வழக்கு காசோலை

தொகையை எதிரிக்கு கொடுத்த தேதிக்கு முன்னிட்டு 1 1/2 வருடமாக JCB வைத்து தொழில் செய்து வந்ததன் மூலம் பழக்கம்.

எனக்கு சொந்தமாக ஒரு JCB வாகனம் உள்ளது.

எனது JCB யை எதிரிக்கு வாடகைக்கு ஓட்டினேன் என்றால் சரிதான்.

வாடகை தொகையை எதிரி செலுத்திவிட்டார் என்றால் சரிதான்.

நான் எதிரிக்கு வாடகைக்கு வண்டி ஓட்டியதால் வாடகை தொகைக்காக எதிரி என்னிடம் வழக்கு காசோலையை கொடுத்து வைத்திருந்தார் என்றால் சரியல்ல.

எதிரி வாடகை தொகைக்காக கொடுத்த காசோலையை எதிரி வாடகை கொடுத்த பின்பும் எதிரியின் முடிக்கப்பட்ட வங்கி கணக்கில் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரி தொழில்சாலையில் நான் வாடகைக்கு வண்டி ஓட்டி வரும் சூழ்நிலையில் எதிரி என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

எதிரியின் முடிக்கப்பட்ட வங்கி கணக்கில் காசோலை செலுத்தி அவை திருப்பபட்ட பின்பு அக்கிரம லாபம் அடைய வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரி என்னிடம் 10.07.2021 ம் தேதி ரூ.5 லட்சத்தை கடனாக பெற்றிருந்தால் அன்றைய தினமே எதிரியிடமிருந்து அதற்கான கடன் உறுதி ஆவணத்தை பெற்றிருப்பேன் என்றாலும், அவ்வாறு இல்லை என்பதால்தான் கடந்த 16.01.2022 ம் தேதி எதிரி என்னிடம் காசோலை கொடுத்ததுபோல் வழக்கிற்காக தயாரித்து பொய்வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்வதுபோல் கடந்த 10.07.2021 ம் தேதி ரூ.5 லட்சத்தை கடனாக பெறவில்லை அதற்காக வழக்கு காசோலையை ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆகையால் எனது வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிபட்டி**